# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.8/2023

### அ.சா. 6 (LW 6 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சந்திரன் | **தொழில்** | |
| **த/க பெயர்** | ராமு | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **16.09.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜதானிக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்கிறேன். வழக்கில் இறந்து போன என் மகன் ஆவார். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். கடந்த 20.06.2022 அன்று நான் வேலைக்கு போயிருந்தேன். பகவதி காளியம்மன் கோவில் அருகில் என் மகனை, அன்பழகன், மனோஜ் ஆகியோர்களால் கொலை செய்யப்பட்டதாக எனக்கு ஊரிலிருந்து ஆட்கள் தொலைபேசி வாயிலாக சொன்னார்கள். ( எதிரிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது) . நான் சின்னாளபட்டியிலிருந்து சம்பவ இடம் வந்தேன். என் மகனை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து சென்று விட்டார்கள். பின்பு நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தேன்.என் மகன் இறந்து கிடந்தார்.வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்த மறுநாள் என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் மருத்துவமனை போன போது போலிசாரை அங்கு பார்த்தேன். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு எதிரிகள் என் மகனை பகவதி காளியம்மன்

**கோவில் அருகில் வைத்து கொலை செய்ததாக ஊரிலிருந்து ஆட்கள் யாரும் சொல்லவில்லை என்றும் ஆனால் ஆட்கள் சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.16 20:30:26 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.